DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC.238/2019
**Depositions of PW7 Witness for**

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரசேகர் | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th Day of March 2025

Signature of Witness.

**11.03.2025**

எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் தற்போது திருப்பூரில் குடியிருந்து வருகிறேன். தையல் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். வழக்கில் இறந்து போன முத்துராமன் என்பவரை தெரியும். கடந்த 28.01.2019 ம் தேதி சிவகாசியில் உள்ள மணி மைத்துனர் இறந்துவிட்டதால். இறப்பு நிகழ்ச்சிக்கு நானும், பெத்துமணி, ராஜா, முத்துராமன், செந்தில்குமார் ஆகியோர் வந்திருந்தோம். மறுநாள் 29.01.2019 ம் தேதி சிவகாசியிலிருந்து எங்கள் ஊர் செல்வதற்காக முத்துராமனும், செந்தில்குமாரும் ஒரு வாகனத்தில் சென்றார்கள். பெத்துமணியும், ராஜாவும் மற்றொரு வாகனத்தில் சென்றார்கள். நானும், பிச்சைபாண்டியும் காரில் சென்றோம். எரிச்சநத்ததை தாண்டி நாங்கள் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்று கொண்டிருந்த போது

வடக்கிலிருந்து அதிவேகமாக வந்த லாரியை பார்த்து முத்துராமன் தனது வாகனத்தை ரோட்டின் ஓரமாக சென்றார். அப்போது வடக்கிலிருந்து வந்த லாரி முத்துராமன் சென்ற வாகனத்தின் மீது மோதியதில் முத்துராமனுக்கு தலையில் காயம்பட்டு சம்பவ இடத்திலேயே மயக்கமடைந்துவிட்டார். செந்தில்குமாருக்கு வலது பக்க காலில் எழும்பு முறிவு ஏற்பட்டது. உடனே முத்துராமன் உறவினருக்கு தகவல் அளித்துவிட்டு, 108 ஆம்புலன்ஸிற்கு தகவல் சொன்னோம். ஆம்புலன்ஸ் வந்து முத்துராமனை பரிசோதித்து பார்த்ததில் ஏற்கனவே இறந்துவிட்டதாக கூறினார்கள். காயம்பட்ட செந்தில்குமாரை அதே 108 ஆம்புலன்ஸ் மூலம் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் நாங்கள் அவரை அங்கு கொண்டு செல்லாமல் மதுரை லட்சுமணனா தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். முத்துராமன் இறப்பிற்கு காரணமான லாரியை ஒட்டி வந்த நபரை என்னால் அடையாளம் காட்ட முடியும். **(எதிரியை அடையாளம் காட்டுவதற்காக அரசு தரப்பில் கேட்டு கொண்டதன் பேரில் முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**